## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 3 | நாள் : 06.09.2024 | |
| அசல் வழக்கு எண். | 29/2020 | | |
| பெயர் | விஷ்ணு பிரியா | த/பெ | ராமகிருஷ்ணன் |
| வயது | 30 | தொழில் | R.D.O மயிலாடுதுறை |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை:

நான் மயிலாடுதுறை R.D.O வாக 17.07.2024 முதல் பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் வந்தது. சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன். மேற்படி காலக்கட்டத்தில் தேன்மொழி என்பவர் வருவாய் கோட்ட அலுவலராக பணிபுரிந்தார். நான் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணை வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணைதான். அதன் அசல் எடுத்து வந்துள்ளேன். அதில் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் மற்றும் நகரம் கச்சேரி ரோடு 4/15 ரசாக் டவர் என்ற முகவரியை சேர்ந்த திரு. செந்தில் த/பெ மாரிமுத்து, திருமதி. வசந்தி க/பெ செந்தில், செல்வி திராவிடசெல்வி த/பெ செல்வராஜ் ஆகியோர் கந்து வட்டி புகார் தெரிவித்து மயிலாடுதுறை வட்டம் மற்றும் நகரம் கச்சேரி ரோடு 3/15 ரசாக் டவர் என்ற முகவரியை சேர்ந்த திருமதி ராஜகுமாரி மற்றும் அவரது கணவர் முருகேசன் ஆகியோர் மீது அளித்துள்ள புகார் தொடர்பாக 1வது மாதம் 2019 ம் வருடம் காலை 11.00 மணிக்கு மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலகத்தில் மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலகம் முன்பாக நடைபெறும் விசாரணைக்கு கைவசம் உள்ள ஆவணங்களுடன் தவறாமல் ஆஜராகிட தெரிவித்து 5 நபர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. அந்த சம்மன் **சா.சா.ஆ. 1** ஆகும். அந்த சம்மனில் R.D.O 26.01.2019 தேதியிட்டு கையெழுத்து போட்டுள்ளார். அந்த சம்மனில் பேரில் 31.01.2019 அன்று அந்த சம்மனில் கண்ட 1. ராஜகுமாரி, 2. முருகேசன், 3. திரு. செந்தில்,

4.திருமதி. வசந்தி, 5. செல்வி. திராவிடசெல்வி ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அன்றைய தினமே அப்போதைய வருவாய் கோட்ட அலுவலர் அவர்களை விசாரித்து Statement வாங்கியுள்ளார். அதன்பிறகு மனுதாரர் தரப்பிலும், எதிர்மனுதாரர் தரப்பிலும் முன்னுக்குபின் முரணாக Statement கொடுத்ததால் மயிலாடுதுறை DSP க்கு மனுதாரர் கொடுத்த புகார் forward செய்யப்பட்டுள்ளது. DSP க்கு forward செய்யப்பட்ட கடிதத்தின் நகல் கோப்பில் உள்ளது. அது **சா.சா.ஆ. 2** ஆகும். அப்போதைய வருவாய் கோட்ட அலுவலரின் விசாரணையின்போது ராஜகுமாரி, முருகேசன் ஆகியோர், செந்தில், வசந்தி, திராவிட செல்வி எழுதிக்கொடுத்ததாக சொல்லி செக்கோ, புரோநோட்டோ காட்டியதாக கோப்பில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த மனுவை நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரி. வாதி முருகேசன் எந்தவிதமான Statment ம் அப்போதைய வருவாய் கோட்ட அலுவலர் முன்பு கொடுக்கவில்லை என்றால் சரி. சா.சா.ஆ. 2 ஆவணத்தின் பேரில் மயிலாடுதுறை DSP என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது குறித்து எந்த அறிக்கையும் எங்கள் அலுவலகத்திற்கு வரவில்லை. வாதியின் மனைவி ராஜகுமாரியின் வாக்குமூலத்தில் மனுதாரர்கள் செந்தில், திராவிட செல்வி, வசந்தி ஆகியோர் எந்தெந்த தேதிகளில் கடன் பெற்றார்கள் என்றும், அதற்காக என்ன ஆவணங்கள் எந்த தேதிகளில் கொடுத்தார்கள் என்ற விவரத்தினை சொல்லியுள்ளார் என்றால் சரி. அவரது Statement ல் மனுதாரர்கள் செந்தில், திராவிட செல்வி, வசந்தி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்ற சங்கதியை சொல்லியுள்ளார் என்றால் சரி. மனு சம்பந்தப்பட்ட அசல் கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரி. system திலிருந்து retrieve செய்து எடுக்கப்பட்டுள்ளது. வாதியின் மனைவி ராஜகுமாரியிடம் வாக்குமூலம் நான் பெறவில்லை என்றால் சரி. அசல் கோப்பு இல்லாத நிலையில் எந்த விவரங்களையும் தெரிவிக்க இயலாது என்றால் சரியல்ல. DSP க்கு அனுப்பிய கடிதத்தில் சா.சா.ஆ. 2 ஆவணத்தில் என்னென்ன ஆவணங்கள் அந்த

கடித்தத்துடன் அனுப்பப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்களிடம் பெற்ற வாக்குமூலங்கள் இணைத்து அனுப்பப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது. யார்யார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி. செந்தில், வசந்தி, திராவிடசெல்வி, ராஜகுமாரி ஆகியோரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அந்த மேற்படி நபர்களின் வாக்குமூலங்களை இணைத்து அனுப்புவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுவிசாரணை

வாதியின் மனைவி ராஜகுமாரியிடம் அப்போதைய வருவாய் கோட்ட அலுவலர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் சரி.